


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

விடுதலைப்புலிகள் இயக்க முகாம்கள் எல்லாமே ஒவ்வொரு குடும்பம் போன்றவை. ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரை எவ்வளவுக்கு நேசிப்பார்களோ அதேபோலத்தான் இங்கும் இருக்கும். அதைப் போலத்தான் சின்னச் சின்னப் பிரச்சினைகள் தோன்றும். பின்னர் சமாதானமாவார்கள். ஆனால் ஒரேயொரு பிரச்சினையில் மட்டும் இலகுவில் சமாதானம் தோன்றாது. அது தாக்குதல்களுக்கு தம்மைக் கூட்டிக் கொண்டு போகாமல் விடுவதால் வரும் பிரச்சினை. இந்த ஒரு விடயத்தில் மட்டும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் குமுறுவார்கள். இந்த விடயத்தைக் கிளப்பும் ஒருவன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாரில்லாதவனாகவே இருப்பான். அவனது இதயத்தின் குமுறல் அடுத்த போர்க்களத்தில் துப்பாக்கியை இயக்கும் வரை ஓயாது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவனாக இருந்த றெஜிக்குக் கூட இந்த மனோபாவம் இருந்தது. பயிற்சி எடுத்து முடித்திருந்த காலத்தில் எந்த மோதலுக்குமே சந்தர்ப்பம் கிடைக்காமல் குமுறினான் அவன். அந்தக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் ஏனையோர்தான் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டோரைவிட றெஜி வயதில் கூடியவன். இதைப் பார்க்கும்போது அவனுக்கு இன்னும் கோபம் வந்தது. ஒரு நாள் கோபத்துடன் கூறினான்: "நான் தலைவருக்குச் சொல்லப் போறன் எனக்குப் பென்சன் தாருங்கோ எண்டு. இவ்வளவு காலம் இயக்கத்தில இருந்தும் இன்னும் சண்டைக்குப் போகாமல் இருந்திருந்து வயசும் ஏறிப் போச்சு. இந்தப் போக்கில போனா 55 வயசிலையும் பீல் டுக்குப் போறது சந்தேகம். பேசாமல் பென்சன் கேட்டிட்டா நல்லது" என்றான். பின்னர் அவனது போராட்ட வாழ்க்கையில் கிடைத்த முதல் சந்தர்ப்பமான ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது உள்ளே அவன் சென்ற வேகம் -சண்டையிட்ட விதம் -"என்னை இத்தனை நாள் சண்டையிட அனுமதிக்காதது எத்தனை பெரிய தவறு" என்று கேட்பதைப் போல இருந்தது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினனான றெஜியாலேயே, தன்னை தாக்குதலுக்கு அனுப்பாததற்கு விசேட காரணம் எதுவும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள முடியவில்லையானால், முகாமில் எல்லோருக்கும் பிரியமானவனாக -எல்லோருக்கும் சின்னவனாக இருந்த கெங்காவால் மட்டும் எப்படி அந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியும்? அதுவும் நாம் வாழ்வதற்கான போராட்டம் இது என்பதை எமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் திருமலை மண்ணில் பிறந்த அவனால் -அவனைத் தவிர்த்து -அவனது கண்ணுக்கு எதிரேயே -ஏனையோர் சிறீலங்காப் படைகளுக்கு எதிரான தாக்குதலுக்காகப் புறப்படுவதை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தாக்குதலுக்கு அவனைக் கூட்டிச் செல்லாத முகாம் பொறுப்பாளர்அவனது முகத்தில் சிரிப்பை எதிர்பார்ப்பதற்கு என்ன நியாயமுண்டு? சிரிக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கதைக்காமல் கோபம் போட்டும் விடுவான் கெங்கா. அவனைச் சமாதானப்படுத்துவதென்றால்- மீண்டும் அந்த முகாம் பொறுப்பாளருடன் -அவன் கதைக்க வேண்டுமென்றால் -நிச்சயம் அடுத்த தாக்குதலில் பங்கு பற்ற அவன் அனுமதிக்கப்பட வேண்டும்.

1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்ட கெங்காவின் சொந்த இடம் திருமலை நகரிலிருந்து 16 மைல் தொலைவில் உள்ள கும்புறுபிட்டி என்ற கிராமமாகும். தந்தையை இழந்த இவனுக்கு தாயைத் தவிர எந்தச் சொந்தமுமில்லை. அவனது உலகம் -குடும்பம் எல்லாமே இயக்கம்தான். அண்ணா -அக்கா -தம்பி -தங்கச்சி எல்லா உறவையும் அவன், இந்தப் போராட்டத்தை நேசித்தவர்களிடமே கண்டான். அதேபோல் பிறராலும் நேசிக்கப்பட்டான்.

இவனது கடின உழைப்பு, போராட்டத்தின் மீது இவன் கொண்ட பற்று என்பன ஏனையோருக்கு முன்மாதிரியாக இருந்தன. பன்குளம், தம்பலகாமம், சாம்பல்தீவுப் பகுதிகளில் சிறீலங்காப் படையின் மீது மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களின் வெற்றிக்கு இவனது கடினமான உழைப்பே காரணமாக இருந்திருக்கின்றது.

இவன் பங்கு பற்றிய தாக்குதல்களில் இரு தாக்குதல்கள் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாதவை. சிங்கள குடியேற்றத்தால் மொறவேவா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட முதலிக்குளம் பகுதியில் சிறீலங்கா விமானப் படையினரின் ட்றக் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அந்த மண்ணுக்குச் சொந்தம் இல்லாத வெதமாத்தயா என்ற ஆக்கிரமிப்பாளன் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

சிறீலங்காப் படையினரை முழுமனிதராகக் கணித்துப் பழக்கமில்லாத லங்கா புவத் இச்சம்பவத்தில் இரு உயர் அதிகாரிகள் உட்பட எட்டுப் படையினரும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களில் எயர்லீடர் கிறஸல்பெக், எயர்லீடர் பெர்ணான்டோ, விமானப்படை தொழில்நுட்பவியலாளர்கள் ஜே. பி. ஜீ. பெர்ணான்டோ, பி. எம். டீ. ஆர். வீரசிங்க, ஐ. எல். இந்திரசாந்த மற்றும் ஆர். டீ. கொட்டாச்சி, வீரசிங்க லாமசிறி, என். ஏ. -கே. லக்ஸ்மன், ஏ. ஜீ. பியதாச என்ற படை வீரர்களும், கணவத்த வெத மாத்தயா என்ற பொதுமகனும் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டது.



**கெங்கா**

**(ஆனந்தராஜா சுந்தரராஜா)**
**திருமலை**
**23. 08. 67 - 02. 10. 86**
**சாம்பல்தீவில் சிறீலங்காப் படையின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரமரணம்**

அத்துடன் தாக்குதலுக்கு உள்ளாகிய ட்றக்கின் எஞ்சின் 100 மீற்றர் தூரத்தில் காணப்பட்டதாகவும், பலியான படைவீரர்களின் உடல்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரம் வரை சிதறுண்டு கிடந்ததாகவும் குறிப்பிட்டது.

அப்போதைய திருமலை மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் சந்தோசம் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதேபோல குரங்குப் பாலத்தில் சிறீலங்காப் படயினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இவன் செயற்பட்ட விதம் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாததாகும். இத்தாக்குதலில் எப்படியும் தான் ஒரு ஆயுதத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற வைராக்கியம் இவனுள் எழுந்தது. சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் காயப்பட்டுக் கிடந்த சிறீலங்காப் படை வீரனை நோக்கி இவன் ஓடிய வேகம் -அவனது ஆயுதத்தை கைப்பற்றிக் கொண்டு வந்த திறமை -இவையெல்லாம் விவரிப்பதற்கு வார்த்தைகள் இல்லாத காட்சிகளாகும்.

ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் 'கெங்கா இப்படிச் செய்தான்' என்றெல்லாம் கதைத்துக் கொண்டிருக்கும் போராளிகள் 02-10-1986 இல் சாம்பல் தீவுப் பகுதியில் இடம்பெற்ற பாரிய இராணுவ முற்றுகையைப் பற்றி மட்டும் கதைப்பதில்லை. ஏனெனில் துக்கம் அவர்கள் வாயை அடைத்துக் கொள்ளும். அந்த முற்றுகையை முறியடித்துக் கொண்டு திரும்பியவர்களில் இவனும் கப்டன் றொபினும் இடம்பெறவில்லை. கணவனை இழந்த நிலையில் தனது உடலில் உயிர் ஒட்டியிருப்பது இவனுக்காகத்தான் என்றிருந்த இவனது தாய்க்கு அவள் கேட்க விரும்பாத செய்தியைச் சொன்னார்கள் போராளிகள். ■

---

## பலமான சிந்..

புனிதம் குடும்பத்தினர் காலைச் சாப்பாடு சாப்பிட்டு மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு அதுவும் ஜீரணமாகிவிட்டது... கடுகன்...?

"அப்ப சாப்பிடன்..."

"கட்டித் தாருங்கோ..."

"நீ சாப்பிடு.... உன்ரை அம்மாவுக்குக் கட்டித் தாறன்..."

"நீங்கள் கட்டித் தாருங்கோ..." எவ்வளவுதான் பசியாக இருந்தாலும் அவன் தனித்துச் சாப்பிடமாட்டான்.

புனிதம் பழைய பத்திரிகை ஒன்றை எடுத்துக் கொண்டு சாப்பாடு கட்டுவதற்காகக் குசினியை நோக்கிச் சென்றாள்.

"ஐயா..."

"என்ன கடுகன்..."

"......." கடுகன் கேள்விக் குறியோடு மௌனமாக செல்வராசாவைப் பார்க்கிறான்

"என்னடா கடுகன்..."

"... இந்தப் பழைய அல்பத்தை எனக்குத் தாறீங்களா...." முன்பு கேட்ட அதே கேள்வி!

செல்வராசா பதில் எதுவும் கூறாமல் தடித்த கண்ணாடிக் கூடாக, கடுகனைக் கூசிக் கூசிப் பார்க்கிறார்.

ஆஸ்பத்திரி வீதியையும், ஸ்ரான்லி வீதியையும் இணைக்கின்ற தார்றோட்டு, இந்த றோட்டில் புகையிரதக் கடவையைத் தாண்டி வலதுபக்கமாக அமைந்துள்ள குறுக்கு வீதியில், முதலாவது வளைவில் அமைந்துள்ள மாடிவீடு, 'புனித மகால்' -இதுதான் செல்வராசாவின் வீடு. செல்வராசாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்த இரண்டும் ஆண்கள். கடைக்குட்டி பெண். ஆண்கள் இருவருமே வெளிநாட்டில் இருக்கின்றனர். பெண் பிள்ளை மட்டும் இங்கு இருக்கின்றாள்.

இந்த வீட்டின் ஐந்து அங்கத்தவர்களுக்கும் தனித்தனி அல்பங்கள் உண்டு. ஒவ்வொருவரின் அல்பங்களிலும் அவர்களின் பிறந்தநாள் படங்கள் தொடக்கம் வரிசைக் கிரமத்தில் ஒட்டப்பட்டுள்ளன.

மூத்தமகன் இந்த அல்பத்தை அனுப்பியதோடு 'இந்த அல்பத்தில் உள்ள படங்களை ஒட்டி வையுங்கள்' என்ற குறிப்பையும் எழுதியனுப்பியிருந்தான். இன்னும் நான்கு அல்பங்கள் வெளிநாட்டிலிருந்து மகன் அனுப்புவான் என்பதைச் செல்வராசா ஊகித்துக் கொண்டு இப்புதிய அல்பத்தில் தனது படங்களை ஒட்டுகிறார்.

படம் ஒட்டி முடிகிறது.

சப்பாணி கொட்டி அமர்ந்திருந்த செல்வராசா எழும்பி பக்கத்திலிருந்த குசன் செற்றியில் அமர்ந்து, மடியில் அல்பத்தை வைத்துப் பக்கங்களைப் புரட்டுகிறார். கண்ணாடிக்கூடாக அவரது பார்வைக்கோடுகள் மிகவும் சிரமப்பட்டு ஒவ்வொரு படமாக மேய்கின்றன!

தனது வாழ்க்கையைத் தானே இரை மீட்கிறார்.... இறந்தகாலத்தை மட்டுமல்ல, எதிர்காலத்தைப் பற்றியுமே. எதுவுமே புரியாத கடுகனும் அந்தப் புகைப் படங்களைப் பார்க்கிறான்!

செல்வராசாவின் முகத்தில் நிறைவு.

கடுகனின் முகத்தில் பெருமை!

புனிதம் பார்சலோடு வருகிறாள். பார்சல் கடுகனின் கைக்கு மாறுகிறது.

பார்சலைப் பெற்றுக்கொண்ட கடுகன், புனிதத்தின் முகத்தைப் பார்க்கிறான். அவனது பார்வையைப் புரிந்து கொண்ட புனிதம் அந்தப் பழைய அல்பத்தை எடுத்து அவனிடம் கொடுக்கிறாள்.

கடுகனுக்குப் பெரும் மகிழ்ச்சி!

கடுகன் புறப்படுகிறான்.

கடுகன் சென்ற பத்து நிமிடங்களில், வெளியே சென்றிருந்த செல்வராசாவின் மகள் வதனா வருகின்றாள். இவர்களின் வீடு அமைந்திருக்கும் வரிசையில் ஐந்தாவது வீட்டில் கடுகன் அமர்ந்திருக்கும் செய்தியை வதனா கூறுகின்றாள்.

புனிதம் அச்செய்தியை வழமைபோல் சாதாரணமாகவே எடுத்துக் கொள்கிறாள்...... ஆனால் செல்வராசா.... அவர் காரியக்காறன்..... கண்ணாடிக் கூடாக வதனாவைப் பார்க்கிறார்.... அப்பார்வைக் கோட்டில் கடுகனைப் பற்றிய கேள்வி பளிச்சிடுகின்றது!

அல்பத்தை வைத்துவிட்டு சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு புறப்படுகின்றார்.

"அவன் இருந்தால்... உங்களுக்கென்ன... நீங்கள் பேசாமல் இருங்கோ...." செல்வராசா முன்கோபக்காரன். அதை உணர்ந்திருந்த புனிதம் அவரை மறிக்கிறாள்.

"இல்லை புனிதம் ... எந்தப் பற்றுமே .. இல்லாத கடுகன் அல்பத்துக்கு ஆசைப்படுகிறானெண்டால்... இவன்ரை மனதுக்குள்ளை ஏதோவொரு ரகசியம் இருக்கவேணும்.... அதை என்னெண்டு அறியவேணும்..."

செல்வராசா புறப்படுகின்றார்.

ஐந்தாவது வீடு.

விமானக்குண்டுக்கு இலக்காகி முன்பிளேட்டைத் தவிர ஏனைய பகுதிகள் யாவும் இடிந்துபோன வீடு, இந்த வீட்டின் முன்பிளேட்டின் கீழ்த்தான் கடுகன் இருக்கின்றான்.

நேரம் ஐந்து மணியைத் தாண்டிவிட்டது. மனிதரே இல்லாத -இடிந்துபோன அந்த வீட்டில் தனித்திருந்து கடுகன் என்ன செய்கின்றான்?

செல்வராசாவின் பார்வைக்கு கடுகன் அமர்ந்திருப்பது தெரிகின்றது. கடுகன் கால்கள் இரண்டையும் விரித்து, நீட்டி அமர்ந்திருக்கின்றான். அவனது முதுகுப்புறமாகச் சத்தமிடாது செல்வராசா செல்கிறார்.

செல்வராசா கடுகனை அண்மித்து நிற்கிறார்.

புனிதத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட சோற்றுப் பார்சலில் இருந்து ஒரு பிடி சோற்றை எடுத்து ஒரு பூவரசமிலையில் தனக்கு முன்னால் வைத்திருக்கின்றான் கடுகன்.

தனது காற்சட்டைப் பைக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த சில படங்களை... அவை தினசரிப் பத்திரிகைகளிலும், விளம்பர நோட்டீசுகளிலுமிருந்து கிழித்தெடுக்கப்பட்ட படங்கள்.... அவைகளை விரித்து, நிலத்தில் வைத்து உள்ளங்கையால் தேய்த்து... படத்தின் சுருக்கங்களை ஓரளவு நிமிர்த்தி அப்படங்களின் பின்புறத்தில் சோற்றுப் பருக்கைகளை வைத்துத் தேய்த்து ... பசையேற்றி.... அல்பத்தில் ஒட்டுகிறான்.....

பலமடிப்புக்கள் ஏற்பட்ட மங்கலான படங்கள்... செல்வராசா பார்வை குறைந்தவர்.... கண்ணாடி போடாமல் நிற்கிறார்....

யாருடைய படங்களை இவன் ஒட்டுகிறான். செல்வராசாவின் மனம் குழம்புகின்றது.... அக்குழப்ப நிலையில் அவரது கடந்த கால அனுபவங்களில் ஒன்று... முரல்மீனாய் அவரது இதயத்தைக் குத்தி மறைகின்றது...

...செல்வராசா பாடசாலை மாணவனாய் இருந்த காலத்தில் பாடக் கொப்பிகளில் சினிமா நடிகர்கள், நடிகைகளின் படங்களை ஒட்டி வைத்து, பாட

தொடர்ச்சி 4ம் பக்கம் ....